**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.18/2025**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாள் திங்கள் கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வெங்கடேசன் | த/பெ.: | கண்ணையன் |
| கிராமம்: | பில்லாநல்லூர் | தாலுக்கா: | ராசிபுரம் |
| மதம்: | இந்து | தொழில்: | முதன்மை பணியாளர் அலுவலர், நெடுஞ்சாலை துறை (பணி ஓய்வு) |
| வயது: | 62 | முகவரி: | பில்லாநல்லூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 03.11.2025.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 10.01.1958–ல் வாதியின் தாயார் பெயரில் உள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகும். 27.05.1992–ல் நானும், 2ம் பிரதிவாதியான எனது சகோதரி பிரேமாவும் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தம் நகல் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள கணினி பட்டா **வா.சா.ஆ.2** ஆகும். 08.11.1973–ல் எனது தாயாரின் இறப்புச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.3** ஆகும். 08.11.1973–ம் தேதியிட்ட எனது தந்தை

இறப்புச்சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.4** ஆகும். 03.01.2022–ல் நான், 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகும். 17.01.2022–ல் 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு சார்வு நகல் தாக்கல் செய்கிறேன். 30.10.2023–ல் நான், வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 02.11.2023–ல் நான் அனுப்பிய அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.7** ஆகும். 16.11.2023–ல் 1ம் பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

**வாதி தரப்பு மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.